**பாணந்துறை நகர சபை - 2023**

-------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாணந்துறை நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பாணந்துறை நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியமத்தின் பந்தி இலக்கம் 3.28 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றுத் தயாரிக்கும் போது ஆண்டின் மிகையாக ரூபா 82,395,207 குறிப்பிட வேண்டியிருந்த போதிலும் ரூபா 91,723,943 ஆக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் ஆண்டின் பெறுமானத்தேய்வு மற்றும் நிலையான சொத்துக்கள் விற்பனை நட்டங்களை சீராக்கும் போது ரூபா | மூலதன செலவின மானியங்களை அகற்றி காசுப்பாய்ச்சல் கூற்றுக்கான மிகை சரியாக குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |

1,018,930 வேறுபாடு காணப்பட்டது.

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மூலதன செலவின மானியப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளுக்காக விரிவான வருமானக் கூற்றில் மற்றும் சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்றில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டுக்காக கிடைக்க வேண்டிய மூலதன செலவின மானியம் ரூபா 6,000,000 விரிவான வருமானக் கூற்றில் மீண்டெழும் அல்லாத செலவினத்திற்காக அரசாங்கத்திலிருந்து கிடைக்கின்ற கையளித்தல் பெறுமதியாக வருமானத்தில் இனங்காணப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் போது சரியாக குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்குரிய மூலதன மானியம் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | புத்தசாசன சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு செயலாளரின் 2021 பெப்ரவரி 10 ஆந் திகதிய இலக்கம் CA/06/02/DOT/NFC என்ற கடிதத்தின் மூலம் உள்ளூராட்சி நிறுவனத்தினால் சினிமா மண்டபங்களில் இருந்து அறவிடப்படுகின்ற கழியாட்ட வரி 02 வருடங்கள் வரை அறவிடாமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும் 2022 ஆம் ஆண்டிற்காக ரூபா 600,000 கழியாட்ட வரி சிட்டையிடல் பெறவேண்டிய மீதியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எதிர்வரும் ஆண்டின் போது சரியாக கணக்கீடு செய்யப்படும். | எதிர்வரும் ஆண்டின் போது சரியாக கணக்கு வைக்கப்படும். | உரிய தீர்மானத்தின் பிரகாரம் கழியாட்ட வரிக்கா சிட்டையிடல் மேற்கொள்ளாதிருத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி மற்றும் | எதிர்வரும் ஆண்டின் போது சரியாக கணக்கு வைக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமானத்தேய்வுடன் ரூபா 15,662,931 மீள்மதிப்பீட்டு இலாபமாக உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் முன்னைய ஆண்டின் சீராக்கத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | வழங்கப்பட்ட ஆதனவரிக் கழிவு ரூபா 713,668 மாற்றல்கள் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து கிடைக்க வேண்டிய மீதியாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | முற்பணமாக வழங்கப்பட்ட ஆதனவரிக் கழிவு சரியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (உ) | வீதிகள் மதகுகள் மற்றும் பாலங்களுக்காகவும் மற்றும் நூலகப் புத்தகங்களுக்காகவும் 2023 ஆம் ஆண்டிற்குரிய பெறுமானத்தேய்வு முறையே ரூபா 827,485 மற்றும் ரூபா 152,851 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தேறிய புத்தகப் பெறுமதியில் பெறுமானத் தேய்வு கணிப்பிட்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (ஊ) | 2023 ஆம் ஆண்டில் கணனி மென்பொருள் மீள்மதிப்பீடு செய்யும் போது ரூபா 405,977 ஆன திரண்ட பெறுமானத் தேய்வு நீக்கப்படாதிருந்துடன் 2023 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 102,539 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு விடயத்திற்குரிய மீதி அதற்குரிய பட்டோலைகளுடன் இணக்கம் செய்யும் போது ரூபா 3,229,825 வேறுபாடு காணப்பட்டது. | நிலுவை ஆதனவரி மீதியாக பட்டோலைகளில் நிலுவை ஆதனவரி மிகைக் கட்டணம் சேகரித்தல் கணக்கின் மீதி குறிப்பிடப்பட்டுள்ளதுடன் நிலுவை ஆதனவரி சேகரித்தல் கணக்கின் மீதி இரண்டினதும் | வேறுபாடுகளுக்கு உரிய காரணங்களைக் கண்டறிந்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

|  |  |  |  |
|---|---|---|---|
|  |  | கூட்டுமொத்தம் ஆகும். |  |
| (ஆ) | மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களில் கிடைக்க வேண்டியவைகளின் பெறுமதிகள் குறிப்பின் பிரகாரம் ரூபா 183,055,411 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 189,055,410 ஆக ரூபா 6,000,000 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 164(2) ஆம் பிரிவின் பிரகாரம் 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி சட்டம் | சுற்றுலா சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஹொட்டல்களிலிருந்து கட்டணம் அறவிடப்படாதிருந்ததுடன் தொகையினை உறுதிப்படுத்துவதற்காக கணக்குக் கூற்றுக்கள் பெறப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 82,395,207 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 72,451,067 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

**2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட

வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 73,000,000 | 73,248,009 | 57,329,706 | 15,918,303 | 74,860,300 | 77,321,357 | 54,822,971 | 22,498,385 |
| (ii) | வாடகை | 6,621,800 | 7,833,400 | 6,774,668 | 10,171,544 | 10,152,100 | 6,820,587 | 2,747,037 | 4,073,550 |
| (iii) | அனுமதி ப்பத்திரக் கட்டணம் | 421,000 | 460,000 | 460,000 | - | 1,797,100 | 458,500 | 458,500 | - |
| (iv) | ஏனைய வருமான ம் | 1,660,000 | 1,934,200 | 1,944,150 | 59,140 | 236,078,610 | 1,201,679 | 1,201,679 | - |
| | மொத்தம் | 81,702,800 | 83,475,609 | 66,508,524 | 26,148,987 | 322,888,110 | 85,802,123 | 59,230,187 | 26,571,935 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காலப்பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஆதனவரி மற்றும் வரி நிலுவை ரூபா 37,826,699 ஆக இருந்ததுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதில் ரூபா 18,226,380 அதாவது 48 சதவீதம் அறிவிடப்பட்டிருக்க வில்லை. | அறவிட வேண்டிய நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடல் வேண்டும். |
| (ஆ) | காலப்பகுப்பாய்வு அறிக்கையின் படி மீளாய்வாண்டின் இறுதியில் ஒட்டுமொத்த ஆதனவரி மற்றும் வரி நிலுவை ரூபா 39,639,846 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையில் 01 | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக விசேட வருமானம் சேகரித்தல் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஆதனங்களைத் தடைசெய்யும் நிகழ்ச்சித் திட்டங்களை | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான ரூபா 35,715,916 தொகையும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 3,923,930 தொகையும் ஆக இருந்ததுடன் ரூபா 50,000 இனை விஞ்சிய 101 ஆதனவரி அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை மீதி ரூபா 10,109,384 ஆகும். | மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | கடை வாடகை தகவல் அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் வியாபார நிலைய கடைகளின் சேர்க்கப்பட வேண்டிய வருமானம் ரூபா 22,202,312 ஆக இருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 45 சதவீதமான ரூபா 9,961,208 தொகை அறவிட வேண்டிக் காணப்பட்டது. | 2023.12.31 ஆம் திகதி வரையில் அறவிட முடியாதுள்ள சதவீதம் 44.87 வீதம் ஆகும். | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடல் வேண்டும். |
| (ஈ) | மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகார தரப்பினரிடம் இருந்தும் 2023 டிசம்பர் 31 இல் கிடைக்கவேண்டிய முத்திரை கட்டணம் ரூபா 84,744,229 ஆகும். | அறவிட வேண்டிய நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | முத்திரைக் கட்டணத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கட்டிடம் நிர்மாணித்தல் தொடர்பாக 2023 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களாக முறையே 69 மற்றும் 06 ஆக இருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை முறையே 54 மற்றும் 03 ஆக இருந்ததுடன் 2023 | அங்கீகரிக்கப்படாத விண்ணப்பங்களில் உள்ள குறைபாடுகள் விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அந்த குறைபாடுகளை தயாரித்து வழங்குகின்ற முறையில் அதனை மீண்டும் | விண்ணப்பங்களுக்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| திசெம்பர் 31 இல் உள்ளவாறு தரச்சான்றிதழ் வழங்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 06 மாத்திரம் ஆகும். | அங்கீகாரத்திற்காக திட்டமிடல் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்து கொண்டுவரப்படுகின்ற முற்பணத் தொகையின் பெறுமதியான ரூபா 1,075,318 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கோரப்பட்டுள்ளது. | முற்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புகையிரத நிலைய வீதி மற்றும் சந்தை வீதி கடை வாடகை அறவிடுவதற்காக 2018 ஆம் ஆண்டில் புதிய மதிப்பீடு அமுல்படுத்தப்படாமல் 2017 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்ட வாடகைத்தொகை 2018 ஆம் ஆண்டில் அறவிடுவதற்கு 2018.08.02 ஆம் திகதி எடுக்கப்பட்ட பொதுச்சபைத் தீர்மானத்தை இரத்துச் செய்வதற்கும் 2018.01.01 முதல் 2018 ஆம் ஆண்டில் புதிய மதிப்பீட்டின் பிரகாரம் கடை வாடகை அறிவிடுவதற்கும் மற்றும் அத்திகதியிலிருந்து 2019.12.31 ஆம் திகதி வரை உடன்படிக்கை செய்வதற்கும் அத்திகதியிலிருந்து நிலுவை வாடகைப் பணத்தை அறவிடுவதற்கும் 2019.08.01 ஆந் திகதிய பொதுச்சபைக் கூட்டத்தின் அங்கீகரித்திருந்தது. எனினும் இந்த முன்மொழிவிற்கு கடை உரிமையாளர்கள் விருப்பம் தெரிவிக்காமையின் அடிப்படையில் பழைய மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு கடை வாடகை அறவிடப்பட்டிருந்ததுடன் சபையினால் புதிய மதிப்பீட்டின் பிரகாரம் பணத்தை | புதிய மதிப்பீட்டின் பிரகாரம் நிலுவைக் கடை வாடகை அறவிடுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |

அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 செப்தெம்பர் 30 ஆந் திகதி தனியாரி நிறுவனமொன்றிலிருந்து ரூபா 2,165,000 தொகையில் 9500 லீற்றர் இயலளவை உடைய எரிபொருள் தாங்கியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரையிலும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து எண்ணெய் கட்டளையிட்டு களஞ்சியப்படுத்துவதற்காக அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | அந்த அங்கீகாரம் கிடைத்தவுடன் எரிபொருள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எண்ணெய் தாங்கியை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பாணந்துறை கரையோரப் பகுதியில் வைப்பதற்கு பாணந்துறை நகர சபைக்கு நன்கொடையாகக் கிடைத்த மலசலகூட முறைமையுடன் ஆன கொள்கலனை பழுதுபார்ப்பதற்காக ரூபா 189,040 தொகையில் 2020 யூன் 23 ஆம் திகதி தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 செப்தெம்பர் மாதத்தின் போது செயற்திட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்தது. எனினும் 2020 ஆம் ஆண்டு முதல் இதுவரை அந்த செயற்திட்டம் மீண்டும் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் இதுவரையில் புகையிர நிலைய வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கொள்கலனை பயன்படுத்துவதற்கு பயன்படுத்த முடியாதவாறு துரப்பிடித்திருந்தது. | மதிப்பீட்டை மீண்டும் பகுப்பாய்வு வேலைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 2020 செப்தெம்பர் 10 ஆந் திகதி பொதுச் சபையின் மூலம் தீர்மானிக்கப்பட்டதனால் நாட்குறிப்பு அகற்றப்பட்டுள்ளது. | விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் தனியார் கம்பனியொன்றில் இருந்து ரூபா 295,000 செலுத்தி கொள்வனனவு செய்யப்பட்ட சம்பளம் மற்றும் மனிதவள முகாமைத்துவ மென்பொருள் இதுவரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதனால் நகரசபையின் அலுவலக நடவடிக்கைகளை கணனி மயப்படுத்துவதற்காக 07 விடயங்களுடன் மென்பொருள் முறைமை கொள்வனவு செய்யப்பட்ட தொகைக்கு மேலதிகமாக பயன்படுத்தப்படாமல் சேவைக் கட்டணமாக 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 178,500 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | சேவை உடன்படிக்கை 5.2 பிரிவின் பிரகாரம் சராசரியாக மென்பொருள் விற்பனையின் பின்னர் மென்பொருளின் மொத்தப்பெறுமதியில் 20 சதவீதமான அளவு சேவைக்கட்டணமாக வருடாந்தம் செலுத்த வேண்டிய போதும் அந்த நிறுவனம் வழங்கிய சேவைகளுக்காக மென்பொருளின் மொத்தப் பெறுமதியை 5 சதவீதம் படி வருடாந்த அறவிடல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பெறப்படுகின்ற ஒவ்வொரு மென்பொருளின் பெறுமதிக்கும் சேவைக் கட்டணம் செலுத்துவதாயின் மொத்த பங்குப் பெறுமதியில் 10 சதவீத சேவைக்கட்டணம் வருடாந்தம் அறவிடப்படுவதாக உரிய நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளமையும் அதன் பிரகாரம் முறைமையின் மொத்தப் பெறுமதியில் 5 சதவீத தொகை சேவைக் கட்டணமாக செலுத்துதல் எமது நிறுவனத்திற்கு சாதகமானதாகும். | மென்பொருள் முறைமையை செயற்திறனாக பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நகர அபிவிருத்தி அதிகார சபைக்காக மக்கள் வங்கியில் பேணிச் செல்லப்படுகின்ற ரூபா 5,293,640 காசு மீதி நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரத்துடன் ஆக்கபூர்வமான பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | இதற்காக 2024 ஆம் ஆண்டின் போது தந்திரிமுல்ல நூலகம் தரை மாடி வேலைகளை பூர்த்தி செய்வதற்காக ரூபா 5,000,000 தொகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஆரம்ப | நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரத்துடன் ஆக்கபூர்வமான பணிகளுக்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 2024.04.08 ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு நகர அபிவிருத்திக் கணக்கில் உள்ள பணம் இதற்காக விடுவிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | பாணந்துறை நகர சபைக்குச் சொந்தமான 06 காணிகளின் பெறுமதி இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்தக் காணி தொடர்பில் உரிமை கோருவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதுடன் தற்போது அது தொடர்பாக தீர்த்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. | சபைக்குச் சொந்தமான காணிகளின் பெறுமதிகளை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெமபர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ஊழியர் கடன் மீதி ரூபா 4,750,971 ஆக இருந்ததுடன் அறவிட முடியாத மற்றும் விரிவான விபரங்கள் காண்பிக்கப்படாத கடன்மீதி ரூபா 521,639 ஆகும். 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய மீதி ரூபா 1,274,706 தொகையும், ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய மீதி ரூபா 1,745,121 ஆகவும் இருந்ததுடன் மரணமடைந்த மற்றும் சேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய மீதி ரூபா 1,209,505 ஆகும். | நிலுவை கணக்கு மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புாணந்துறை நகர சபையின் 2023 ஆம் ஆண்டில் பாதீட்டின் மூலம் மீண்டெழும் அல்லாத செலவீனத்திற்காக ரூபா 8,919,200 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் பாதீட்டுடன் ஒப்பீடு செய்யும் போது செலவீனங்கள் 24 சதவீதம் அதவாது ரூபா 2,166,445 மாத்திரமாக இருந்தது. | கடன் கொடுத்தோருக்காக இந்த சேமிப்புப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. | பாதீடு கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படல் வேண்டும். |